# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 170/2021 நாள்.03.02.2026

PW1- திரு. சாமிநாதன், த/பெ. திரு.தண்டபாணி

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு பிரதிவாதி எப்படி தெரியும் என்றால் ஒருவர் என்னிடம் அழைத்து வந்த வகையில் தெரியும். அந்த ஒருவர் பெயர் என்ன என்றால் ரவிக்குமார். ரவிக்குமார் என்ன வேலை பார்க்கிறார் என்றால் தெரியாது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கயிறு தொழில் செய்கிறேன். நான் வட்டிக்குவிடும் தொழில் செய்யவில்லை என்றால் ஆமாம். ரவிக்குமார் பிரதிவாதியின் மகன் அருண்பிரசாத் பாரதிதாசன் பல்கலைகழகத்தில் வேலை வாங்கி தருவதாக உறுதி மொழி கொடுத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரூபாய் 6லட்சம் கொடுத்ததாக சொல்லுகிறேனே அது எப்படி கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கரிகாலனிடம் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், ரவிக்குமாரின் துண்டுதலின்பேரில் பத்திரத்தை வாங்கி வைத்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ரவிக்குமார் மேல் காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதியபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் பிரதிவாதிக்கும் நேரடியாக தொடர்பு கிடையாது என்றும், நான் தாவா பணத்தை அவருக்கு கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதி மேல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN

Digitally signed by NAGARAJAN
Date: 2026.02.03 18:47:43 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.